

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | அக்டோபர் 19, 2017 | புரட்சி 16 | முழக்கம் 40 | விலை: ரூ.3.00


*டெல்லியில் பட்டாசுகளுக்குத் தடை*

## தீபாவளி கொண்டாட்டம் தேவை தானா?

இந்து மதப் பண்டிகையில் ஒன்றான தீபாவளி கொண்டாட்டம் தேவையா? இந்தத் தீபாவளி கதை - தமிழர்களை அழித்தொழித்ததைக் கொண்டாடச் சொல்லும் கதை என்பது ஒன்று. இதையும் தாண்டி இதில் அடங்கியுள்ள கேடுகள் என்ன?

- உயிருக்கு ஆபத்தான நச்சுகளைக் கொண்டு தயாரிக்கப்படும் பட்டாசு தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அந்த பிஞ்சுக் கரங்கள் வெந்து, நோய்களை சுமந்து வாழ்க்கையை தொலைக்கின்றன.
- தீபாவளிக்கு டெல்லியில் பட்டாசுகளை வெடிக்க உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது. காற்று மாசுபாடுகளைக் கட்டுப்படுத்தவும் பட்டாசு வெடிப்பதால் மாசு அதிகரிக்கிறதா என்பதைக் கண்காணிக்கவும் உச்சநீதிமன்றம் அக்டோபர் இறுதிவரை தடை விதித்துள்ளது.
- பட்டாசு ஆலைகளில் பாதுகாப்பு இல்லை. வெடி விபத்துக்குள்ளாகி, ஆண்-பெண் தொழிலாளர்கள் உயிர்ப்பலி ஆகிறார்கள்.
- வணிக நிறுவனங்கள் இந்தப் பண்டிகையை நுகர்வோர் கலாச்சாரமாக்கி பொருள்களை வாங்கிக் குவிக்கத் தூண்டுகின்றனர். தள்ளு படிகள் அறிவிக்கப்படுகின்றன. எண்ணெய் தேய்த்துக் குளிக்கச் சொன்ன ‘மகாவிஷ்ணு’, தள்ளுபடி விலையில் மிக்சி, கிரைண்டர், குளிர்சாதனப் பெட்டிகள், 4ஜி அலைபேசிகளை வாங்கச் சொன்னாரா? இது மதத்தின் புனிதமா? வர்த்தகத் தந்திரமா?
- புரிந்து கொள்ளுங்கள். மதம், வர்த்தக சந்தையுடன் இணைக்கப்பட்டுவிட்டது. எனவே மதப் பண்டிகை ‘வர்த்தகத் திருவிழா’ என்ற வடிவ மெடுத்துள்ளது.

இனி ‘நரகாசுரனை’ கொன்ற மகாவிஷ்ணு ஒவ்வொரு ஆண்டும் “பக்தர்களே, அம்பானி, டாட்டா, சரவணா ஸ்டோர், ஜி.ஆர்.டி. தங்க மாளிகைகளில் பொருள்களை வாங்கினால் உங்கள் ஆத்மா சாந்தி பெறும்; சொர்க்கத்துக்கு வந்து சேருவீர்கள்” என்று சொன்னதாக புதிய புராணங்கள்கூட வரக் கூடும். இந்தப் பொருள்கள் நீடித்து உழைப்பதற்காக புரோகிதப் பார்ப்பனர்கள் - புதிய ‘இலட்சார்ச்சனை’, ‘ஜெபங்கள்’, ‘மந்திரங் களோடு’ ஒவ்வொரு வீட்டுக்கும் வரலாம். இதற்கு ‘கிரடிட் கார்டில்’ முன் கட்டணம் செலுத்தி, ‘ஆன்லைன்’ பதிவு செய்யலாம் என்ற அறிவிப்புகளும் வரலாம்.

- இந்த ஆண்டு பண்டிகைக்கு மக்கள் 25,000 கோடி ரூபாய் செலவிடத் தயாராகிவிட்டார்கள் என்று வணிகம் சார்ந்த ஆய்வு மய்யம் ஒன்று பல நகரங்களில் ஆய்வு செய்து அறிவித்துள்ளது. பொருள்களை தேவைக்குத் தான் வாங்க வேண்டும். ஆடம்பரங்களை வெளிச்சம் போடும் வாழ்க்கை, வசதிப் படைத்தவர்களுக்கு தேவைப் படலாம்; ஆனால், நடுத்தர, ஏழை மக்கள் இத்தகைய மனநிலைக்கு தள்ளப்படுவதால் சந்திக்க வேண்டிய பொருளாதார நெருக்கடிகள் எவ்வளவு? சிந்திக்க வேண்டாமா?
- பட்டாசுப் புகை சுற்றுச் சூழலுக்கு பெரும் கேடுகளை உருவாக்குகிறது.

‘வர்த்தக சந்தை’, பொருளாதார நெருக்கடிகளை சாமான்ய மக்களின் தலைமீது சுமத்துகிறது.

தீபாவளிக்காகவே ‘மாத சேமிப்புகள்’, ‘பண்டுகள்’ என்று மக்கள் சேமிப்பு ஒரு நாள் கூத்துக்காக வீணாகிறது.

‘தீபாவளி’ என்றாலே ‘டாஸ்மாக்’ குதூகலமும் ‘எண்ணெய் தேய்த்து’ குளிக்கும் சடங்கு போல், ‘கங்கா ஜல’ புண்ணிய தீர்த்தமாகி விடுகிறது.

இவ்வளவு கேடுகளையும் இழுத்துக் கொண்டு வரும் தீபாவளியை கொண்டாடத்தான் வேண்டுமா?

சிந்தியுங்கள், தமிழர்களே! - ‘இரா’

## வடமாநிலத்துக்கு போகிறதாம்

# கோவை மத்திய அரசு அச்சகம் மூடல்!

கோவையில் ஆண்டுக்கு ரூ.1.5 கோடி லாபத்தில், அதிக உற்பத்தித் திறனுடன் இயங்கும் அரசு அச்சகத்தை, வட மாநில அச்சகங்களுடன் இணைக்கும் நடவடிக்கையை மத்திய அரசு கைவிட வேண்டுமென கோரிக்கைகள் எழுந் துள்ளன.

கோவை பெரியநாயக்கன்பாளையம் அருகே உள்ள வீரபாண்டியில், நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தின்கீழ் 1964-ல் அரசு அச்சகம் தொடங்கப்பட்டது. அப்போதைய மத்திய கல்வி அமைச்சர் சி.சுப்பிரமணியம், காமராஜர் ஆகியோரது முயற்சியால் அமைக்கப்பட்ட இந்த அச்சகம், 132.7 ஏக்கரில் அமைந்தது.

சுமார் 25 ஏக்கரில் தொழிற்சாலையும், மீதமுள்ள பகுதியில் 463 குடியிருப்புகள் உள்ளிட்ட வசதிகளும் உள்ளன. 1000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுடன் இயங்கிய இந்த அச்சகத்தில் வேலைவாய்ப்புகள் குறைந்து, தற்போது 66 தொழிலாளர் களுடன் இயங்குகிறது. ஆனாலும் தொடர்ந்து சிறப்பான செயல்பாட்டால் ஒவ்வோர் ஆண்டும் உற்பத்தி இலக்கை பூர்த்தி செய்து வருகிறது.

தற்போது தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், அஞ்சல்துறை, பார்ம் ஸ்டோர்ஸ், விமானப் படை ஆகிய வற்றுக்கான ஆவணங்களை இந்த அச்சகம் தயாரித்து வழங்கி வருகிறது. செலவுகள் போக ஆண்டுக்கு ரூ.1.5 கோடி லாபம் ஈட்டி வருகிறது.

**வட இந்திய அச்சகம்**

இந்நிலையில், நாட்டிலுள்ள 17 அச்சகங்களை 5 ஆக குறைக்க கடந்த 21ஆம் தேதி மத்திய அரசு முடிவெடுத் துள்ளதாக செய்திகள் வெளியாயின. அதில் கோவை, கேரளத்தில் உள்ள கொரட்டி, கர்நாடகத்தில் உள்ள மைசூரு அச்சகங்கள் மூடப்பட்டு, அவற்றின் பணிகள் நாசிக்கில் உள்ள அச்சகத்தோடு இணைக்க மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளதாக மத்திய அரசின் செய்திப் பிரிவு அறிவித்துள்ளது. கோவை அச்சகம் மூடப்பட்டால் வேலை வாய்ப்பு, ஜாப்ஆர்டர், தென்னிந்திய முக்கியத்துவம் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும் என தொழிற் சங்கத்தினர் கூறுகின்றனர். எனவே தென்னிந்திய அச்சகங்களை மூடிவிட்டு, வட இந்திய அச்சகங்களோடு அவற்றை இணைக்கும் முடிவை மத்திய அரசு கைவிட வேண்டுமென தொழிலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். பிரச்சினைக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக அரசியல் கட்சியினரை சந்தித்து ஆதரவு திரட்டி வருகின்றனர்.

**4 ஆண்டு ஜாப் ஆர்டர்**

இதுகுறித்து மத்திய அரசு அச்சக தொழிற்சங்கத்தினர் கூறும்போது, ‘கடந்த பிப்.21-ம் தேதி கோவை அச்சகத்தில் துறை இயக்குநர், இணை செயலாளர் தலைமை யில் ஆய்வு நடந்தது. கோவை அச்சகத்தை சர்வதேச தரத்துக்கு உயர்த்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.மாறாக, இந்த அச்சகத்தையே மூடப் போவதாக அறிவிப்பு வந்துள்ளது அதிர்ச்சியாக இருக்கிறது.

அச்சகத்துக்கு சொந்தமான 132.7 ஏக்கர் நிலத்தை நிலம் மற்றும் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் விற்று, வட மாநிலங்களில் உள்ள அச்சகங்கள் மேம்படுத்தப்படும் என கூறப்படுகிறது. 4 ஆண்டுகளுக்கு ஜாப் ஆர்டர் கைவசம் உள்ளது. ஏராளமான தொழிலாளர்கள் இதை நம்பியுள்ளோம். உற்பத்தி, லாபம் ஆகியவற்றில் முன்னணியில் உள்ள கோவை அச்சகத்தை மூடக்கூடாது. மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்றனர்.

கோவை அரசு அச்சக அதிகாரிகளிடம் கேட்டபோது, ‘12 அச்சகங்களை மீதமுள்ள 5 அச்சகங்களுடன் இணைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு செய்திப்பிரிவில் தகவல் வெளியாகி யுள்ளது. இயக்குநரகத்தில் இருந்து இதுவரை அறிவிப்புகள் வரவில்லை’ என்றனர்.

## அச்சகத்தை மூடாதே: கழகம் கண்டன ஆர்ப்பாட்டம்

கோவை பெரியநாயக்கன்பாளையத்திலுள்ள மத்திய அரசு அச்சகத்தை வடமாநிலத்துக்குக் கொண்டுசெல்வதை கைவிடக் கோரி திராவிடர் விடுதலைக் கழக சார்பில் அக்.10ஆம் தேதி காலை 10 மணியளவில் பெரியநாயக்கன்பாளையம் பேருந்து நிலையம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கழக அமைப்பு செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி, வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் உள்ளிட்ட கழகப் பொறுப்பாளர்களும் கோவை, ஈரோடு, திருப்பூர் கழகத் தோழர்களும் 80 பேர் பங்கேற்றனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த பாலமுருகன் பங்கேற்றுப் பேசினார்.

# நரகாசுரன் எதன் மீது நின்று பூமியை பாயாக சுருட்டினான்?

**– பெரியார் –**

தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவது தமிழனுக்கு மானக்கேடும், முட்டாள்தனமுமான காரியம் என்று 50 ஆண்டுகளாக எழுதியும் பேசியும் வருகின்றேன். இதன் பயனாய் அநேக தமிழ் மக்கள் இப்பண்டிகையைக் கொண்டாடாமல் நிறுத்தி விட்டார்கள் என்றாலும், இன்னமும் பல தமிழ் மக்கள் தங்கள் இழிநிலையை மானவமானத்தை உணராமல் கொண்டாடி வரு கிறார்கள். இக்கொண்டாட்டமானது தமிழ் மக்களுடைய, இழிவையும் முட்டாள்தனத்தையும் காட்டுவது மாத்திரமல்ல, தமிழர்கள் (திராவிடர்கள்) ஆரிய இனத்தானுக்கு அடிமை. அவனது தலைமைக்கு அடிமை, மீட்சிபெற விருப்பமில்லாத மானங் கெட்ட ஈனப்பிறவி என்பதைக்காட்டிக் கொள்ளப் போட்டி போடுகிறார்கள் என்பதையே காட்டுகிறது.

“மானமும் பகுத்தறிவும் உடையவனே மனிதன்; அஃதிலார் மனித உருவமுள்ள மிருகமே ஆவர்” என்ற அறிவுரைப்படி மானமில்லா மக்களே இப்போது தீபாவளி கொண்டாடு கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது.

வெளிநாட்டிலிருந்து பிழைப்புக்கு வழி தேடிக்கொண்டு நம் நாட்டிற்குள் புகுந்த ஆரியர் அக்காலத்தில் அவர்கள் இருந்த காட்டுமிராண்டித் தன்மைக்கு ஏற்ப மடமையினால் கொண்ட கருத்துக்களை மதுக்குடி வெறியில் உளறி வைத்தத் தன்மைக்கு ஏற்ப தொகுத்துக் களியாட்டம் ஆடிய ஆட்டங்களைத் தமிழ் மக்கள் என்ன சூழ்நிலையாலோ ஏற்று அவற்றுக்கு அடிமையாகி, பின்பற்றித் தாங்களும் அப்படியே களியாட்டம் ஆடி வருகிறார்கள். அதன் பயனாய், அம்மடமையும் அல்லது வெறி உளறலுமே இன்று தமிழ் மக்களுக்கு கடவுளர்களாக, மதமாக, நீதி நெறிகளாக, பண்டிகை, விரதம், நோன்பு, உற்சவங்களாக, நல்ல நாள், தீய நாளாக, அப்பாத்திரங்களே நல்லவர்களாக, தீயவர்களாக ஆக்கப்பட்டு இருந்து வருகின்றார்கள்.

இஸ்லாம், கிருஸ்துவம் முதலிய மார்க்கங்களாலும், வெள்ளையர் ஆட்சியாலும் உலக மக்களிடையில் ஒரு அளவுக்கு தலைகீழான மாறுதல் ஏற்படும்படியான கல்வி அனுபவமும் ஞானமும் ஏற்பட்டிருந்தும்கூட இந்த மடமை மிக்க ஆரிய வலையில் சிக்கிய தமிழ் மக்களிடையில் பெரிதும் சிறு அளவு ஞானமும் மாறுதலும் ஏற்படாமல் அம் மடமையிலேயே மூழ்கித் திளைத்து வருகிறார்கள்!

எவ்வளவு சொன்னாலும் அறிவும் அனுபவமும் இல்லாத சில இளைஞர்கள் (மைனர்கள்) பித்தலாட்டத்தாலும், வஞ்சகமும், துரோகம், மோசத்தாலும், வாழவேண்டிய தீய எண்ணத்தில் தேர்ச்சி பெற்ற பரத்தையரிடம் சிக்கி விட்டார்களேயானால் எப்படி யார் எவ்வளவு அறிவையும் நன்மையையும் போதித்தாலும் அதைக் காதில் வாங்கக்கூட செவிப்புலனை ஒதுக்காமல் தன் உள்ளம் முழுவதையும் பரத்தையிடமே ஒப்புவித்து அவளிடம் ஓடவே வழி தேடுவார்களோ அதே போல் நடந்து கொள்கிறார்கள்!

இப்படி நடப்பவர்கள் பாமர மக்கள் மாத்திர மல்லாமல் தமிழ்ப்பண்டிதர்கள் அதுவும் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் உட்பட தமிழ்ப் பண்டிதர்கள் முதல் பெரும்புலவர்கள் மற்றும் இங்கிலீஷ் விஞ்ஞானத்தில் உடற்கூறு, பூகோளக்கூறு இவைகளில் நிபுணர்கள் உட்பட எல்லாத் தமிழர்களும் இந்தக் காட்டுமிராண்டி மடமைக்கு அடிமைப்பட்டு, சிந்தனையின்றி நடந்து கொள்வதென்றால் தீபாவளி கொண்டாடுவது என்பதில் உள்ள தமிழனின் இழிவுக்கும், மடமைக்கும், மானமுமற்ற தன்மைக்கும் இதைவிட வேறு எதை எடுத்துக்காட்டாகக் கூற முடியும்?

நம் பள்ளிகளும் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் நம் மக்களுக்கு இந்த இப்படிப்பட்ட மடமையை உணரும் அளவுக்குக்கூட அறிவைக் கொடுக்கவில்லையென்றால், இக் கல்விக் கூடங்கள் மடமையையும் மானமற்ற தன்மையையும் பயிர் செய்யும் வளமுள்ள விளைநிலம் என்பதைத் தவிர, வேறு என்னவென்று சொல்ல முடியும்? இதில் பயிலும் மாணவர்களுக்கு எந்த விதத்தில் தான் மானமும் அறிவும் விளைய முடியும்?

**தீபாவளி என்றால் என்ன? (புராணம் கூறுவது)**

1. ஒரு காலத்தில் ஒரு அசுரன் உலகத்தைப் பாயாகச் சுருட்டிக் கொண்டுபோய் கடலுக்குள் ஒழிந்து கொண்டான்.
2. தேவர்களின் முறையீட்டின்மீது மகாவிஷ்ணு பன்றி அவதாரம் (உரு) எடுத்துக் கடலுக்குள் புகுந்து அவனைக் கொன்று உலகத்தை மீட்டு மீண்டும் வந்து விரித்தார்.
3. விரித்த உலகம்(பூமி) அப்பன்றியுடன் கலவி செய்ய ஆசைப்பட்டது
4. ஆசைக்கு இணங்கி பன்றி(விஷ்ணு) பூமியுடன் கலவி செய்தது.
5. அதன் பயனாய் பூமி கர்ப்பமுற்று, நரகாசூரன் என்ற பிள்ளையைப் பெற்றது.
6. அந்தப்பிள்ளை தேவர்களை வருத்தினான்.
7. தேவர்களுக்காக விஷ்ணு, நரகாசூரனுடன் போர் துவங்கினார்.
8. விஷ்ணுவால் அவனை வெல்ல முடியவில்லை. விஷ்ணு வின் மனைவி நரகாசூரனுடன் போர் தொடுத்து அவனைக் கொன்றாள்.
9. இதனால் தேவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.
10. இந்த மகிழ்ச்சியை (நரகாசூரன் இறந்ததற்காக) நரகாசூரனின் இனத்தாரான திராவிட மக்கள் கொண்டாட வேண்டும். இதுதானே தீபாவளிப் பண்டிகையின் தத்துவம்!

இந்த 10 விஷயங்கள்தான் தமிழனைத் தீபாவளி கொண்டாடும்படி செய்கிறதே அல்லாமல், வேறு என்ன என்று யாருக்குத் தெரியும்? யாராவது சொன்னார்களா? இதை ஆராய் வோம். இக்கதை எழுதிய ஆரியர்களுக்கு பூமி நூல் கூடத் தெரிய வில்லை என்று தானே கருத வேண்டியிருக்கிறது?

1. பூமி தட்டையா? உருண்டையா?
2. தட்டையாகவே இருந்தபோதிலும் ஒருவனால் அதைப் பாயாகச் சுருட்ட முடியுமா?
3. எங்கு நின்று கொண்டு சுருட்டுவது?
4. சுருட்டினால் தூக்கிக் கட்கத்திலோ தலைமீதோ எடுத்து ஏக முடியுமா?
5. எங்கிருந்து தூக்குவது? கடலில் ஒளிந்து கொள்வதாயின் கடல் அப்போது எதன் மீது இருந்திருக்கும்?
6. விஷ்ணு மலம் தின்னும் பன்றி உருவம் எடுக்க வேண்டிய அவசியம் என்ன?
7. அரக்கனைக் கொன்று பூமியை விரித்ததால் பூமிக்குப் பன்றி மீது காதல் ஏற்படுவானேன்?
8. பூமி மனித உருவா? மிருக உருவமா?
9. மனித உருவுக்கும் மிருக உருவுக்கும் கலவியில் மனிதப் பிள்ளை உண்டாகுமா?
10. பிறகு சண்டை ஏன்? கொல்லுவது ஏன்? இதற்காக நாம் ஏன் மகிழ்ச்சி அடையவேண்டும். இவைகளைக் கொஞ்சமாவது கொண்டாடும் தமிழ்ப்புலவர்கள் அறிஞர்கள் சிந்திக்க வேண்டாமா?

நரகாசூரன் ஊர் மாகிஷ்மகி என்ற நகரம், இது நர்மதை ஆற்றின் கரையில் இருக்கிறது. மற்றொரு ஊர் பிரகத் ஜோதிஷா என்று சொல்லப்படுகிறது. இது வங்காளத்தில் அசாம் மாகாணத்துக்கு அருகில் இருக்கிறது. இதைத் திராவிட அரசர்களே ஆண்டு வந்திருக்கிறார்கள். வங்காளத்தில் தேவர்களும் அசுரர்களும் யாராக இருந்திருக்க முடியும்?

இவைகள் ஒன்றையும் யோசிக்காமல் பார்ப்பனன் எழுதி வைத்தான் என்பதற்காகவும் சொல்லுகிறான் என்பதற்காகவும் நடுஜாமத்தில் எழுந்து கொண்டு குளிப்பதும், புதுத் துணி உடுத்துவதும் பட்டாசு சுடுவதும், இந்த பார்ப்பனர்கள் வந்து பார்த்து “கங்கா ஸ்நானம் ஆயிற்றா” என்று கேட்பதும், நாம் ஆமாம் என்று சொல்லி கும்பிட்டு காசு கொடுப்பதும், அவன் காசை வாங்கி இடுப்பில் சொருகிக் கொண்டு போவதும் என்றால் இதை என்னவென்று சொல்லுவது?

மாணவர்களே! உங்கள் ஆசிரியர்களுக்கு மானம் புத்தி இல்லாவிட்டாலும் நீங்களாவது சிந்தியுங்கள். எதற்காக இவ்வளவு சொல்லுகிறேன் என்றால், இக்கதை எழுதின காலத்தில் (ஆரியர்) பார்ப்பனர்கள் எவ்வளவு காட்டு மிராண்டிகளாக இருந்திருக்க வேண்டும்? அந்தக்காலத்தில் நாம் ஈன நிலை அடைந்தது ஏன்? என்பதைத் தமிழன் ஒவ்வொருவரும் நன்கு சிந்திக்க வேண்டும் என்பதற்கு ஆகவேயாகும்.

# பெரியாருக்கு முதல் பெருமை சேர்த்த தாம்பரம்

***பெரியாருக்கு முதலில் பெருமை சேர்த்த நகரம் என்ற பெருமையைக் கொண்டது தாம்பரம்.***

சென்னையை அடுத்த தாம்பரம் ரயில் நிலையம் எதிரில் அரசு ஊழியர்களுக்கு புதிய குடியிருப்புகளை 39 ஏக்கர் 51 சென்ட் பரப்பளவில் அரசு உருவாக்கியது. அப்போது அந்த குடியிருப்பு பகுதிக்கு பெரியார் பெயர் சூட்ட அப்போதைய உள்ளாட்சிப் பிரதிநிதிகள் முடிவு செய்தனர்.

1946ஆம் ஆண்டு செப்டம்பர் 2-ம் தேதி செங்கல்பட்டு மாவட்டக் குழு தலைவர் டி. சண்முகம் தலைமையில் தாம்பரத்தில் நடந்த விழாவில் பெரியார் நகர் என்ற பெயரில் நகரம் உருவாக்கப்பட்டது. அத்துடன் பெரியார் பெயர் கொண்ட வளைவும் திறக்கப்பட்டது.

இதை அன்றைக்கு சென்னை மேயராக இருந்த திவான் பகதூர் என்.சிவராஜ் திறந்து வைத்தார். இந்த விழாவில் ஒரு பார்வையாளராக அண்ணா பங்கேற்றார். பெரியார் பெயர் கொண்ட வளைவு திறக்கப்பட்டதால் தாம்பரம் நகரத்தின் பெயர் பட்டி தொட்டி எங்கும் தெரியவந்தது.

தாம்பரம் தேசிய நெடுஞ்சாலை, முடிச்சூர் சாலை, கக்கன் சாலை, காந்தி ரோடு என்று நான்கு சாலைகளை உள்ளடங்கிய பெரும் பகுதியாக பெரியார் நகர் அமைக்கப்பட்டது. பேருந்து நிலையம், தாம்பரம் மார்க்கெட், நகராட்சி அலுவலகம், தபால் நிலையம், பாரதி திடல் மேடை என தாம்பரத்தின் மொத்த பயன்பாட்டுக்கான பெரும் பகுதி பெரியார் நகரிலேயே அமைந்துள்ளது. தாம்பரத்தில் பெரியார் நகர் என்று பெயர் வைத்த பிறகுதான், தமிழகத்தின் மற்ற பகுதிகளில் எல்லாம் பெரியாரின் பெயரால் தெருக்கள், சாலைகள், நகர்கள் உருவாகின.

கடந்த 70 ஆண்டுகளுக்கு எந்த வளைவை வைத்து தாம்பரம் நகரம் பெருமை கொண்டதோ, அந்த பெரியார் வளைவு 3 ஆண்டுகளுக்கு முன்பு இடம் மாற்றி வைக்கிறோம் என்ற பெயரால் தாம்பரம் நகராட்சியால் அகற்றப்பட்டது. நகர்மன்றத்தில் முறையான அனுமதி ஏதும் இல்லாமல், பெரியார் பிறந்த நாள் அன்றே இரவோடு இரவாக வளைவு அகற்றப் பட்டது. வரலாற்றுச் சிறப்புக்குரிய பெரியார் பெயர் கொண்ட வளைவை உடனடியாக மீண்டும் வைக்க வேண்டும் என்று அனைத்துக் கட்சியினரும் நகராட்சிக்கு அழுத்தம் கொடுத்தனர். இதையடுத்து உடனடியாக கட்டித் தரு கிறோம் என்று உறுதிமொழி கொடுத்து விட்டு, பெயரளவில் பெயர் பலகையை மட்டும் வைத்தனர்.

கடந்த 2016 சட்டப் பேரவைத் தேர்தலின்போது பெரியார் வளைவு அகற்றப்பட்ட விவகாரம் எதிரொலித்தது. அங்கு திமுக வேட்பாளராக போட்டி யிட்ட எஸ்.ஆர்.ராஜா, தான் வெற்றி பெற்றால் பெரியார் பெயர் வளைவை மீண்டும் கட்டித் தருவதாக தனது தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்திருந்தார். அதன்படி, பெரியார் பெயரைத் தாங்கிய வளைவை விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைத்துக் கட்சியினரின் விருப்பமாக உள்ளது.

இதுகுறித்து ‘தி இந்து’ விடம் தாம்பரம் எம்எல்ஏ எஸ்.ஆர். ராஜா கூறும்போது, “தமிழகத்தில் முதன்முதலில் தாம்பரத்தில் தான் பெரியார் பெயரில் நகர் உருவாக்கப் பட்டு, அவர் பெயர் கொண்ட வளைவு திறக்கப்பட்டது. இது தாம்பரத்துக்கு மிகப் பெரிய பெருமை. கடந்த காலத்தில் தேவை யில்லாமல் வளைவு அப்புறப்படுத்தப் பட்டது. தற்போது மீண்டும் அதே இடத்தில் பெரியார் பெயர் வளைவு வைக்க தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படும். உள்ளாட்சித் தேர்தல் முடிந்த பிறகு இந்தப் பணி மேற்கொள்ளப்படும்” என்றார்.

**நன்றி: ‘தமிழ் இந்து’ (செப்.17)**

# பெரியார் பெண் விடுதலையின் தந்தை மட்டுமல்ல; தமிழ்மண் விடுதலையின் தந்தை



**அக்டோபர் 7ஆம் தேதி பெரம்பூர் பெரவள்ளூர் சதுக்கத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் உடுமலை கவுசல்யாவின் எழுச்சி உரை**

இந்த மேடை நமக்கெல்லாம் கற்றுத்தரும் அரசியல் பாடம் ஈடிணையற்றது என்று நான் இந்த அழைப்பிதழ் பார்த்ததிலிருந்தே உணர்கிறேன். நான் அறிந்து மேடையில் உள்ள ஒவ்வொரு வரும் சமூகத்தில் ஒவ்வொரு அடையாளங்களைப் பெற்றிருக்கிறார்கள். அது ஒடுக்கப்பட்டோரின் குரலாகவே தம் குரலை ஆக்கிக் கொண்டவர்கள், சாதி ஒழிப்பில் எவ்வகையிலும் சமரசமற்றவர்கள், மீத்தேன் ஹைட்ரோ கார்பன் அழிவுத் திட்டங்களுக்கு எதிராகக் களத்தில் அஞ்சாது நிற்கும் போராளிகள், அடிப்படையில் இடதுசாரிச் சிந்தனையில் ஊன்றி நிற்பவர்கள் என எல்லாப் பெண்களும் பெண் விடுதலையின் அடையாளமாகவே தமது வாழ்வை அமைத்துக் கொண்டவர்கள். இன்னொரு வகையில் சமூகத்தின் விலங்குகளையும் பண்பாட்டுச் சிறைகளையும் உடைத்து விடுதலைப் பெண்ணாகவே வாழாமல் இப்படிப்பட்ட அடையாளங்களோடு பெண்கள் நிலைபெற்று வெற்றி பெற முடியாது. விடுதலை வாழ்வை பெண்கள் விட்டுக் கொடுக்காமல் வாழ்வதன் மூலம்தான், மக்களுக்கான போராட்ட வாழ்வை மேற்கொள்ள முடியும் என்பதே அடிப்படை பாடம். இந்த நிகழ்வும் மேடையும் நமக்கு இதை உயிரோட்டமாய் நிரூபித்துக் கொண்டுள்ளது. இன்னொரு வகையில் மேடையில் உள்ள இப்படிப்பட்ட அடையாளங்களைக் கொண்ட எல்லோரும் தாடிக் கிழவன் தந்த விடுதலைச் சுடரை உயர்த்திப்பிடிப்பவர்கள். அந்த வகையில் இந்த மேடை அனைத்துவகை அரசியல் அடையாளங்களையும் ஒருசேர பெற்றிருக்கிறது. நான் சாதி ஒழிப்பு களத்தில் நிற்கிறேன். என்னளவிலான குறைந்தபட்ச பங்களிப்பைத்தான் செய்து வருகிறேன். பெண் விடுதலை இல்லாமல் சாதி ஒழிப்பு இல்லை, இனத்தின் விடுதலை இல்லை, என்ற கருத்தில் நான் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளேன். பெண் விடுதலையை சமூகத்தின் பொதுப்புத்தியும் ஏற்கும்படி என் கருத்துப் பரப்புரையின் மூலமும், நானே அப்படி வாழ்ந்து காட்டுவதன் மூலமும் செய்துவிட வேண்டும். அப்படிச் செய்தால் தான் ஆயிரம் ஆயிரம் வளர்மதிகளை உருவாக்க முடியும், என நம்புகிறேன். இதற்கான பயணத்தில் நான் ஒருபோதும் சோர்ந்துவிடவோ, தேங்கிவிடவோ மாட்டேன்.

இந்த அடிப்படையில் சொன்னால் நான் மேடையில் உள்ள சக தோழர்கள் போல், என்னை நான் முழுவதுமாய் ஒப்புக்கொடுத்து இயங்காத போதும், நானும் வளர்மதிதான், நானும் திவ்யா தான், நானும் ஜெயராணி தான்.

நான் பலவிதமான நெருக்கடிகளை தினம் தினம் கடந்து வந்து கொண்டிருக்கிறேன். போராளிப் பெண்கள் இதே நெருக்கடிகளை மீறித்தான் என்னைப் போன்றவர்களுக்கெல்லாம் முன்னோடிகளாக விளங்குகிறார்கள் என நினைக்கும் போது, பெருமிதத்தோடு உங்களைப் பார்க்கிறேன்.

நான் வாழும் சூழலில் நான் நானாக இருக்கவே பெரும் சவால்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. என் இயல்பைக் கொல்வதற்கு அவர்கள் அதிகாரத்தை செலுத்தினால் ஓங்கி மிதித்து வெளியே வந்துவிடுவேன். ஆனால் அவர்கள் பாசம் அக்கறை என்ற ஆயுதங்களைக் கொண்டு முடக்கப் பார்க்கிறார்கள். என் சங்கர் கொல்லப்பட்டதும், நான் கொலை முயற்சிக்கு ஆளாக்கப்பட்டதும்தான் அவர்கள் என் மீது கொண்டிருக்கிற கூடுதல் அக்கறைக்குக் காரணம். அதேநேரம், நான் சமூகத்தில் உள்ள பெண்கள் போல் அல்லாமல் தனித்து நிமிர்ந்து நிற்பதற்குக் காரணமும் அதே சாதிய வன்முறைதான். என்னை அன்பின் பேரால் ஒடுக்க நினைக்கும் அவர்களுக்கு சங்கரின் ரத்தவாடை தெரியாது. அதன் கனத்தை அருகில் நின்று பார்த்தவள் நான். இறுதியாக நானும் அவனும் சேர்ந்துதான் கண்மூடினோம். நான் எழுந்தேன். அவன் எழவேயில்லை. அந்த வெற்றிடத்தை எனக்குத் தந்தது யார்? என் தாய் தந்தையா? அவர்கள் கருவிகள் மட்டும்தான். அடிப்படையான காரணம் கொடிய சாதிதான். என் சங்கருக்கான இறுதி நீதி சாதி ஒழிப்புதான். என் பெற்றோர் அதன் கருவிதான் என்றாலும் அவர்கள் பெறும் தண்டனைதான் சாதிய கௌரவக் கொலைகளுக்குத் தனிச்சட்டம் என்ற கோரிக்கைக்குப் பெரும் பாய்ச்சலைத் தரும். அந்தத் தனிச் சட்டம் சாதி ஒழிப்புக்கு கூர்மையான ஆயுதமாய் அமையும்.

**பெற்ற தாய் தகப்பனை பழி தீர்க்கப் பார்க்கிறாளே என்ற சிந்தனையே எனைச் சுற்றியுள்ளோருக்கு பதற்றத்தைத் தருகிறது. ஒன்றை புரிந்து கொள்ள மறுக்கிறார்கள். இன்று கண்ணுக்குத் தெரியாத மனிதர்கள் மீதும் நான் பேரன்பு கொண்டிருக்கிறேன். அப்படியிருக்கும் போது பெற்றோர் என்பதையும் தாண்டி சக உயிர்கள் என்ற அடிப்படையில் அவர்கள் மீதும் அன்பு உண்டு. அதனால் அவர்களுக்குத் தூக்குத் தண்டனை தரப்பட வேண்டுமா எனக் கேட்டபோது ஒரு உயிரின் மதிப்பை நான் அறிவேன். அப்படியொரு தண்டனை வேண்டாம் என்று பதில் சொன்னேன். ஆனாலும் அவர்களுக்கு அதைத்தாண்டிய அதிகபட்ச தண்டனையைப் பெற்றுத்தராமல் ஓயமாட்டேன். இப்போது என் மனநிலை சங்கருக்கான நீதி என்ற புரிதலில் மட்டுமில்லை சாதிய அமைப்பிற்கு எதிரான நீதி! சாதியைக் குழிதோண்டிப் புதைப்பதற்கான நீதி!**

இந்த நீதிக்கு தாய் தந்தை பாசமே குறுக்கே வரமுடியாது என்று உதறித் தள்ளிவிடுகிறேன். அப்படியிருக்கும் போது அதற்கான பயணத்தைத் தடுக்கப் பாசம் எந்த வகையில் குறுக்கே வந்தாலும் பணிந்து போகமாட்டேன்.

பூ வைத்துக் கொள், பொட்டு வைத்துக் கொள், சேலை கட்டு, குடும்பப் பையனாகப் பார்த்து மணமுடித்து நல்ல மறுமகளாக இரு..இப்படிப்பட்ட அறிவுறுத்தல்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் தினம் தினம் கடக்க வேண்டியுள்ளது. பெரியாரின் பெண்ணாக உருவெடுத்த பிறகு காதலில் கூட முடங்கி வாழ்ந்துவிட மாட்டேன். காதலின் பெயரால்கூட சமூகத்திற்குப் பயந்து, என்னை என் உணர்வுகளை கொன்று, பிணம் போல் வாழ நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். அப்படி அபலைப் பெண் என்ற பரிவை இந்த சமூகத்திடமிருந்து எல்லாக் காலமும் எதிர்பார்த்துக் கிடக்கமாட்டேன். அப்படி நானும் வாழ்வது பெரியார் எனும் மனிதரின் பேருழைப்புக்கு நியாயம் செய்வதாகாது. சங்கருக்கான அதாவது சாதி ஒழிப்பிற்கான நீதிப் பயணம் என்பது, மனதைச் சிறை வைத்துக் கொள்ளாது, கட்டற்ற சுதந்திரத்தோடு, எனக்கான வாழ்வை விட்டுத்தராமல் பயணிப்பதுதான். இந்தப் புரிதலையும் விடுதலை இதயத்தையும் எனக்குப் பரிசளித்த ஒரே தோழன் தந்தை பெரியார் மட்டும்தான்.

விடுதலைப் பெண்ணாக வாழ்கிற போதுதான் சாதி ஒழிப்புக்கு சமரசமற்று பங்களிக்க முடியும் என நம்புகிறேன். இதற்குத் துணை செய்யும் பேரன்பு கொண்ட தோழமைகளுக்கு இந்நேரம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பூ வைக்கமாட்டேன், நகை அணியமாட்டேன், முடி வளர்க்க மாட்டேன், எனக்குப் பிடித்ததைத்தான் செய்வேன், என் பயணத்தை நான்தான் தீர்மானிப்பேன். இதற்குப் பொருத்தமான சூழலில்தான் வாழ்வேன். அல்லது இதற்குப் பொருத்தமான சமூக சூழலை உருவாக்கத் தொடர்ந்து போராடுவேன், என் பங்களிப்பைச் செய்து கொண்டே இருப்பேன். விடுதலைப் பெண்ணால்தான் சாதியை ஒழிக்க முடியும் என திடமாக நம்புகிறேன். சாதி ஒழிப்புக்காக என் விடுதலை வாழ்வை எவருக்காகவும் எந்தச் சூழலிலும் விட்டுத்தர மாட்டேன்.

சில மாதங்கள் முன்பு நெடுவாசல் போயிருந்தேன். ஹைட்ரோ கார்பனுக்கு எதிரான அம்மக்களின் இரண்டாம் கட்டப் போராட்டத்திற்கு நேரில் சென்றுவர விரும்பினேன். அம்மக்களோடு போராட்டத்தில் கலந்து கொண்டு என் ஆதரவைப் பதிவு செய்தேன். இதுவும் பலரையும் உறுத்தியது, பதற்றமடைந்தார்கள். இது தேசவிரோதம், ஏதோ சாதி ஒழிப்பு என்று சுற்றிக் கொண்டிருப்பது பரவாயில்லை. இதென்ன இந்தப் போராட்டத்திற்கெல்லாம் போகிறாய். உன்னை தேச விரோதி என்று சொல்லிவிடுவார்கள். உன் வாழ்வைப் பாழாக்கிக் கொள்ளாதே என்று எச்சரித்தார்கள். ஒரு தரப்பில் அன்பு இருந்தது, இன்னொரு தரப்பில் தேசபக்தியின் அடிப்படையில் அச்சுறுத்தலும் இருந்தது.

தேசவிரோதம் Anti Indian என்று சொல்லுகிறபோதெல்லாம் நிறைய கேள்விகள் பிறக்கின்றன. நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் விவசாயிகள் பக்கம் நிற்பது தேசவிரோதமா? அப்படியானால் விவசாயிகள் இந்த தேசத்தின் குடிமக்கள் இல்லையா? அந்தக் குடிமக்களின் கருத்தை மதிக்காமல் செயல்படுகிறவர்கள் தேசபக்தர்கள், மதித்து அவர்கள் பக்கம் நிற்பவர்கள் தேசவிரோதிகள் என்றால் எப்படி? சனநாயகம் என்றால் பெரும்பான்மையின் கருத்தைச் செயலாக்குவது என்கிறார்கள். அப்படியானால் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் எதிர்க்கும் போது ஏன் அதை ஏற்க மறுக்கிறீர்கள்? ஒருவேளை உங்களுக்குச் சாதகமானதற்கு சனநாயகம் வேண்டும், சாதகமில்லாத ஒன்றென்றால் சனநாயகம் வேண்டாமா? தமிழ்நாட்டின் எதிர்க்கட்சி தொடங்கி பிஜேபி தவிர எல்லாக் கட்சிகளும் ஹைட்ரோ கார்பன் திட்டத்தை எதிர்க்கிறார்கள். அவர்களைக் கைகாட்டி தேசவிரோதிகள் என்று இதுவரை யாரும் சொல்லவில்லையே ஏன்? முதலமைச்சர் கூட ஒருமுறை விவசாயிகளுக்கு விரோதமான திட்டத்தை அனுமதிக்க மாட்டோம் என்றாரே, அவரும் அப்படியானால் தேசவிரோதியா? இவர் தேசவிரோதி அல்லவென்றால் தோழர் வளர்மதியை மட்டும் எப்படி தேசவிரோதி எனச் சொல்லலாம்?

நெடுவாசல் போயிருந்த போது சின்னஞ்சிறியவர்கள் கூட அத்திட்டத்தை எதிர்த்து முழங்கினார்களே, அவர்களை என்னவென்று சொல்வீர்கள்? குழந்தை குட்டிகளோடு வந்து பந்தலில் அமர்ந்து அமைதியாகப் போராடுகிறார்களே பெண்கள் அவர்களும் தேசத்தின் எதிரிகளா? அதையெல்லாம் விடுங்கள்... மீத்தேன், ஹைட்ரோ கார்பன் திட்டங்கள் எப்படி விவசாய மண்ணைப் பாலைவனமாக்கும் என்று அம்மக்கள் முன்வைக்கும் அத்தனைக் கேள்விகளுக்கு, இதுவரை ஏன் பதில் சொல்ல மறுக்கிறீர்கள்? அந்தக் கேள்விகள் அடிப்படையிலேயே தவறானவை என்றால் அதை பதில் தந்து நிரூபிக்க வேண்டியதுதானே? அதை ஏன் இதுவரை செய்யவில்லை? அதற்கான முயற்சியைக் கூட தேசபக்தர்கள் எடுக்கவில்லையே ஏன்? இல்லையானால் உங்கள் கேள்விக்கு பதில் சொல்ல முடியாது அப்படித்தான் செய்வோம் என்று சொல்ல வருகிறீர்களா? அப்படித்தான் என்றால் விவசாயிகளை மதிக்காத, கேள்விகளுக்கும் பதில் தராத, சனநாயகத்தை மிதிப்பவர்கள் எப்படி மக்களைப் பார்த்து தேசவிரோதிகள் எனச் சொல்லலாம்?

அனிதா! இன்னும் நம்மால் மறக்க முடியாத அந்த உயிரின் இழப்பு எப்படி நடந்தது. இந்தியா முழுவதற்கும் நீட் தேர்வு நடைபெறுகிறது. தமிழ்நாடு மட்டும் நீட்டுக்கு விலக்கு வேண்டும் என்று கேட்கிறது. இந்திய அரசின் சட்டப்படியான நீட் தேர்வை எதிர்ப்பதால் மக்களையும் தேசவிரோதிகள் என்பீர்களா? ஒட்டுமொத்த தமிழ்மக்களும் நீட் தேர்வை எதிர்க்கிறோம். அப்படியானால் தமிழ்நாடே தேச விரோதமான நாடா?

நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டிருந்தால் அனிதாவின் கனவு நனவாகியிருக்குமே? அவள் டெலஸ்கோப்பை (Telescoppai) மாட்டிக் கொண்டு கம்பீரமாய் அவள் கிராமத்தில் உலா வந்திருப்பாளே? அவளைப் பார்த்து மற்ற இளம் பிள்ளைகளுக்கும் டாக்டர் கனவு முளைத்திருக்குமே? ஒரு வேளை கிராமத்தில் வாழ்கிற குறிப்பாக வீட்டில் முதன்முதலில் பட்டம் வாங்குகிறவர்களுக்கு டாக்டர் கனவுகூடக் காணக் கூடாது என்று சொல்ல வருகிறீர்களா? இல்லை அப்படிப்பட்ட எளிய பிள்ளைகளும் டாக்டர் ஆக வேண்டும் என்று நினைப்பது தேசத்துக்கு விரோதமானதா? அனிதாக்கள் டாக்டர் ஆக வேண்டும் என்ற அடிப்படையில், நீட் வேண்டாம் என்றால் அவர்கள் சட்டத்திற்கு எதிரானவர்களா? அல்லது ஏதுமற்றவர்கள் ஒடுக்கப்பட்ட பிள்ளைகள் டாக்டர் ஆகக் கூடாது என்றுதான் உங்கள் சட்டமே விரும்புகிறதா? அப்படிச் சொல்கிற சட்டம் எங்களுக்கான சட்டமே

(4ஆம் பக்கம்)

# அன்னையே வாழ்க!

அன்பே அருளே அறிவே எமையே
ஆட்கொண் டியக்கு கின்ற ஆற்றலே!
பண்பே பரிவே திருவே மனிதன்
பகுத்துணரக் கற்பித்த எந்தன் பகவனே!
மாண்பே மருவிலா வித்தே வியப்பே
மனிதப் பரிணாம வார்ப்பின் ஆதியே!
மனித மாண்பின் மின்னோட்ட விசையே
மானவாழ்வை மீட்டளித்த எந்தையே வாழி!

என் சொல்வேனையா! என் செய்வேனையகோ
எம்மக்கள் இன்னும் தூங்குகின் றாரே!
கொடிய பகைவரிட மெல்லா மிழந்தே
கையேந்தி இறைஞ்சி வாழுகின் றாரே!
அடிமைதாமென் றாரியர் காலைத் தொழக்கண்டு
அகிலம் நகைத்திடல் அறியா துள்ளாரே!
விடிவிலையோ எம்மின இழிவிற்கே விந்தையோ!
விடுதலை உணர்வினை இழந்தார் அந்தோ!

துணைசெய்யப் போராடித் தடுத்தாட் கொள்ள
துணிந்தா ரில்லை உமைப்போல் எவருமே!
ஒற்றுமையு மில்லையே பதவி இரைகாட்டி
கண்ணி வைத்தே பார்ப்பான் காத்துள்ளானே!
குடியும் தமிழும் அழியுமோ அய்யகோ!
உனைமறந்தார் உயிரை மறந்தது போலே!

பிணமென்றே எண்ணி நாயும் நரியும்
பிய்த்திழுத்துத் தின்னக் காத்துள் ளனவே!

தூண்டிலை மறந்தே தண்ணீரைப் பழிக்கும்
கெண்டையைப் போலே தமிழரே உன்னை
தூற்று கின்றார் நன்றி மறந்தே!
தமிழருள் இவரொரு நோயுற்றா ரென்பீர்.
தமிழின விடுதலைப் போர்க்களத் தேநீ
தந்திர நரிகளாம் ஆரியரை வென்றே
மீட்டளித்த அறிவை மானத்தை அழித்தாரே!
மீண்டும் அடிமை சூத்திரன் என்றே
மண்டியிட்டு அண்டிவாழ ஆயத்த மானாரே!

எமக்காக எத்துனை சிறைபட்டாய்! போராடி
இழிவு நீங்கிட இனத்தைக் காத்தாயே!
உமதுபொருள் வாழ்வு யாவையும் துறந்தாயே!
உயிருள்ள வரைஓ யாதுழைத் தாயே!
இமைக்காமல் நோய்களை சுமந்து கொண்டே
ஊரெலாம் ஓடியோடித் தேடி மனிதனாக்க
தமிழர் மூளை அணுக்களெங்கும் அறிவை,
தன்மானத்தை ஊட்டிய அன்னையே வாழ்கவே!

**– மாண்பன்**

# இந்தியா எங்களுக்கான நாடு தானா?

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்ல என்று கருதுவது சட்டத்திற்கு விரோதமானதா? இல்லை அப்படிச் சொல்கிற சட்டம் மக்களுக்கு விரோதமானதா? அனிதாக்கள் கனவையும் கொன்று அனிதாவையும் கொல்லும் சட்டம் எப்படி மக்களுக்கான சட்டமாக இருக்க முடியும்?

மெரினாவில் போராடிய திருமுருகன் காந்தி உள்ளிட்ட தோழர்கள் மீது வழக்குப் போட்டு சிறைவைக்கிறீர்கள். எதற்காக என்று பார்த்தால் கொல்லப்பட்ட தமிழ்மக்களுக்கு மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தும் குற்றத்திற்காக என்கிறீர்கள். கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்துவது குற்றமா? இதுவரை அதே மெரினாவில் அஞ்சலி செலுத்தியிருக்கிறார்களே! அப்போதெல்லாம் ஏதாவது மக்களுக்கு பாதிப்பு நடந்துள்ளதா? ஏதாவது வன்முறை நிகழ்ந்துள்ளதா? அப்படி இதற்கு முன்னால் எதுவுமே நடந்திராத போது , அமைதியாகக் கூடி செத்தவர்களுக்கு அழுவது குற்றமா? எங்கள் மண்ணில் எங்கள் மக்களுக்கு அழக்கூட எங்களுக்கு உரிமையில்லையா?

அங்கே மக்கள் கொல்லபட்டதை ஏற்கிறீர்கள் என்றால், அவர்களும் தமிழர்கள் என்றால் ஏன் தமிழக அரசே அந்த அஞ்சலியைச் செய்யக் கூடாது? நீங்களே செய்தால் நாங்கள் ஏன் தனியாகச் செய்யப் போகிறோம்? இல்லை அப்படித் தமிழ் மக்கள் கொல்லப்படவே இல்லை என்று சொல்ல வருகிறீர்களா? ஆம் என்றால் தமிழீழ மக்களைக் கொன்றது யார்யார் என்று வெளிப்படையாய் சொல்வீர்களா? அங்கே நடந்தது இனப்படுகொலை என்று ஜெயலலிதா சொன்னார்களே? தோழர்களை சிறையில் அடைத்த நீங்கள் அதை மறுக்கிறீர்களா? மறுக்கவில்லை என்றால் ஏன் கைது செய்தீர்கள்? தமிழ்நாட்டில் தமிழ் மக்களுக்கு அழக்கூட உரிமையில்லை என்றால் இந்தியா எங்களுக்கான நாடுதானா?

இதுவெல்லாம் என்னுள் அடிக்கடி பிறக்கும் கேள்விகள். விடையை மீத்தேன் வேண்டும் என்பவர்கள் சொல்ல வேண்டும். நீட் வேண்டும் என்பவர்கள் சொல்ல வேண்டும். எம்மக்களுக்காக அழக்கூடாது என்பவர்கள் சொல்ல வேண்டும். கேள்வியை மட்டுமே நான் முன் வைக்கிறேன்.

இவை எல்லாவற்றையும் விட முக்கியமான ஒரு கேள்வி : எங்கள் தமிழ் மக்களுக்காக நிற்பவர்கள் anti indian என்றால் எங்கள் மக்களுக்கு எதிராவே பேசுபவர்கள் எல்லாம் Anti tamilana?

தமிழ்நாடு மட்டும் இவற்றிலெல்லாம் தனித்து முழங்குகிறது. அல்லது தமிழ்நாட்டின் மீது மட்டும் இந்திய அரசு தொடர்ந்து குறிவைத்து அடிக்கிறது. என்னுள் இப்படிப்பட்ட கேள்விகள் தோன்றும் போதெல்லாம் விடையையும் தேடுகிறேன். சரி அதையும் பெரியாரிடம் தேடலாம் என பெரியார் அன்றும் இன்றும் என்ற அன்பளிப்பாகக் கிடைத்த புத்தகத்தை எடுக்கிறேன். புரட்டுகிறேன். அதில் ஒரு முழக்கம் தென்பட்டது. அது என்னுள் பிறந்த கேள்விகளுக்கு நெருக்கமான முழக்கமாக இருந்து. என் கேள்விகளோடு ரொம்பத் தொடர்புடைய முழக்கமாகவும் இருந்தது. அந்த முழக்கம், பெரியாரின் முழக்கம் "தமிழ்நாடு தமிழருக்கே"

அப்படியானால் பெரியார், பெண் விடுதலையின் தந்தை மட்டுமல்ல தமிழ் மண் விடுதலையின் தந்தை! தந்தை சொல்மிக்க மந்திரமில்லை.

சாதி ஒழிப்புதான் என்னைப் பெரியாரிடம் சேர்த்தது. அதே பெரியார்தான் பெண் விடுதலையின் பக்கம் சேர்த்தார். அவரேதான் மண்விடுதலையின் பக்கம் அழைக்கிறார். இந்த மூன்றும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்ததுஎன்றே நம்புகிறேன்.

பெண் விடுதலையே சாதி ஒழிப்புக்கு அடிப்படை. சாதி ஒழிப்பே தமிழர் விடுதலைக்கு அடிப்படை. இதுவே என் புரிதல். கற்றுக் கொடுங்கள். கற்றுக் கொள்கிறேன்" என்றார் கவுசல்யா.

# கழகப் பொறுப்பாளர்கள் மாவட்ட வாரியாக தோழர்களை சந்திக்கிறார்கள்

தலைமைக் கழக சார்பில் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், சூலூர் பன்னீர் செல்வம் ஆகியோர் மாவட்ட வாரியாக கழகத் தோழர்களை கீழ்க்கண்ட பயணத் திட்டப்படி சந்திக்கிறார்கள். 'புரட்சிப் பெரியார் முழக்கம்', 'நிமிர்வோம்' சந்தா திரட்டுதல், 'நிமிர்வோம்' வாசகர் அமைத்தல், கழகக் கட்டமைப்பு நிதி திரட்டுதல் குறித்து கழகத் தோழர்களிடம் கலந்து பேசுகிறார்கள்.

**சுற்றுப் பயண விவரம்:**

26.10.2017 - காலை 10.00 -
ஈரோடு வடக்கு - ஈரோடு

மாலை 5.00 -
ஈரோடு தெற்கு - கோபி

27.10.2017 - காலை 10.00 -
சேலம் மேற்கு - மேட்டூர்.

மாலை 5.00 -
கிருஷ்ணகிரி- கிருஷ்ணகிரி.

28.10.2017 - காலை 10.00 -
தருமபுரி - தருமபுரி.

மாலை 5.00 -
சேலம் கிழக்கு - சேலம்.

29.10.2017 - காலை 10.00 -
நாமக்கல்-திருச்செங்கோடு.

மாலை 5.00 -
திருப்பூர் - திருப்பூர்.

03.11.2017 - காலை 10.00 -
கோவை - கோவை

மாலை 5.00 -
கோவை புறநகர் -
பொள்ளாச்சி.

04.11.2017 - காலை 10.00 -
திண்டுக்கல் - பழனி.

மாலை 5.00 -
பெரம்பலூர்-பெரம்பலூர்.

மாலை 7.00 -
திருச்சி - திருச்சி.

05.11.2017 - காலை 10.00 -
விழுப்புரம் - சங்கராபுரம்

மாலை 6.00 -
வேலூர் - குடியாத்தம்.

மாலை 7.00 - சிவகங்கை -
காளையார் கோவில்.

10.11.2017 - காலை 10.00 -
கரூர் - புலியூர்.

மாலை 4.00 -
மதுரை - மதுரை.

11.11.2017 - காலை 10.00 -
தஞ்சை - பேராவூரணி.

மாலை 5.00 -
திருவாரூர் - மன்னார்குடி.

12.11.2017 - காலை 10.00 -
நாகை - மயிலாடுதுறை.

மாலை 5.00 -
கடலூர் - விருதாச்சலம்.

18.11.2017 - காலை 10.00 -
விருதுநகர் - விருதுநகர்.

மாலை 5.00 -
நெல்லை - பாவூர்சத்திரம்.

19.11.2017 - காலை 10.00 -
குமரி - நாகர் கோவில்.

மாலை 5.00 -
தூத்துக்குடி - தூத்துக்குடி.

தோழர்கள் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

**கொளத்தூர் மணி**
**தலைவர்**

## கேரளாவில் சமூகப் புரட்சி: தலைமை அர்ச்சகரானார் தலித் இளைஞர்



150 ஆண்டுகால பழமை வாய்ந்த மணப்புரம் சிவன் கோயிலின் தலைமை அர்ச்சகராக (மேல் சாந்தி) 22 வயது புலையர் சமூகத்தைச் சார்ந்த யாது கிருஷ்ணா என்ற தலித் பதவி ஏற்றுக் கொண்டார். சமஸ்கிருதத்தில் மேல் பட்டப் படிப்பு படித்த இந்த இளைஞர் 10 ஆண்டுகளாக அர்ச்சகர்களுக்கான பயிற்சி – பூஜை முறைகளைக் கற்றுத் தேறியவர். 'தேவஸ்வம் போர்டு' நடத்திய தேர்வில் 4ஆவது இடத்தில் தேர்ச்சி பெற்று சாதனை படைத்தார் இந்த இளைஞர். 150 ஆண்டுகாலமாக பார்ப்பனர்கள் மட்டுமே அர்ச்சகராக இருந்த இந்த கோயிலில் 'தலித்' ஒருவர் தலைமை அர்ச்சகராகியுள்ளார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 20th October 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN